[1971 டிசம்பர் 16

கோவை நகராட்சி பணியாளர்களின் மிகைவூதிய நிதி

*** 453 வினா.—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை முனிசிபல் தொழிலாளர் போனஸ் பண்டை பிராவிடன்ட் பண்டாக மாற்ற அரசுக்கு உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நகராட்சிப் பணியாளர்கள் மேல் பிரிவுப் பணியாளர் தொகுதியின் கீழ் வகைப் படுத்தப்படாமல் கீழ்ப்பிரிவு அல்லது குற்றேவலர் பணித் தொகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு உள்ளாட்சி மன்றங்கள் கீழ்ப்பிரிவுப் பணியாளர் குற்றேவலர் வருங்கால வைப்பு நிதி விதிகள் பொருந்தும். மேல் பிரிவுப் பணியாளர்களுக்குப் பொருத்தக்கூடிய பயன்களை கீழ்ப்பிரிவு—குற்றேவல் பணியாளர்களுக்கும் நீட்டிக்கும் நோக்கத்துடன் இவ்விதிகளுக்கான வரைவுத் திருத்தங்களை வெளியிடுமாறு ஏற்கெனவே ஆணையிட்டுள்ளது.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, நகரசுத்தித் தொழிலாளர்கள் கண்டின்ஜென்ட் தொழிலாளர்களாக இருப்பதால் பிராவிடன்ட் பண்ட் பிடிப்பது இல்லை. அவர்களைச் சர்க்கார் சிப்பந்திகளாக ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா ? அப்படியானால் அது எப்பொழுது செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்களைச் சர்க்கார் சிப்பந்திகளாக ஏற்றுக்கொள்ளும் செயற்குறிப்பு இல்லை. திங்களொன்றுக்கு 12 முதல் 14 ரூபாய் வரை சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு 2 ரூபாய், 14 முதல் 20 வரை பெறும் ஊழியர்களுக்கு 3 ரூபாய், 20க்குமேல் பெறும் ஊழியர்களுக்கு 4 ரூபாய் என்ற விகிதத்திலே நகரமன்றத்திடம் கொடுத்துவிட்டால் அந்த விகிதத்திற்கு சமமாக நகரமன்றமும் அளிக்கும். அந்த முறையிலேதான் 22—7—1971-ஆம் நாளிட்ட வரைவுத் திருத்தங்கள் வெளியிடப்பட்டன. நகராட்சிப் பணியாளர்கள் கீழ்ப்பிரிவு அல்லது குற்றேவலர் பணித்தொகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு வைப்பு நிதி விதிகள் பொருந்தும். இவ்விதிகளுக்கான வரைவுத் திருத்தங்கள் 22—7—1971-ஆம் நாளிட்டு வெளியிடப்பட்டு இருக்கின்றன. அதிலிருந்து மூன்று வாரத்திற்கு உள்ளாக அவற்றிற்கு எந்த விதமான திருத்தங்களோ அல்லது மறுப்புரைகளோ வருமானால் அவை பரிசீலிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.